**In the Court of the Judicial Magistrate No.II**

**Kovilpatti.**

**DEPOSITION OF WITNESS**

**C.C.246-2018**

PW1 16.10.2018

Name கௌரி

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

*நான் ஏ குப்பணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன் நான் பி எஸ் சி பட்டம் படித்துள்ளேன்.கடந்த 03.03.2018 அன்றுமதியம் சுமார் 12.45 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்து போஸ்டு ஆபிசிற்கு அய்யனார் ஊத்து கிராமத்திற்கு சென்றுவிட்டு நான் திரும்பி வந்து கொண்டிருந்தேன் நான் வரும் பொழுது மதியம் 1.30 மணியளவில் ஊருக்கு வந்து கொண்டீருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த 2 பேர்கள் எனது தங்க செயினை பறித்து கொண்டு இந்த சம்பவத்தை யாரிடமும் சொல்லகூடாது என்று அந்த நபர்கள் மிரட்டினார்கள் சொன்னால் கொன்று விடுவேன் என்று சொன்னார்கள்.இந்த எதிரிகள் தான் அந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் நான் பார்த்துள்ளேன்.சம்பவம் பற்றி எனது சித்தப்பா தற்செயலாக அந்த வழியாக வந்து கொண்டு இருந்தார் நடந்த சம்பவத்தை பற்றி எனது சித்தப்பாவிடம் சொன்னேன் அவர்கள் எதிரிகளை தேடி சென்றார்கள் நான் வீட்டிற்கு வந்து சம்பவம் பற்றி எனது அம்மாவிடம் சொன்னேன் பின்னர் சம்பவம் பற்றி நடவடிக்கை எடுக்ககேட்டு நானும் எனது அம்மாவும் கயத்தார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அது அ.சா.ஆ.1 இந்தபுகார் மனு நான் காவல் நிலையத்தில் சமர்பித்ததுதான் போலிசார் விசாரித்து மேற்படி தங்கநகைகளை எதிரிகளிடம் இருந்து மீட்டு கொடுத்தார்கள்.என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள செயின் தான் நான் சம்பவம் தினத்தன்று நான் இந்த செயினை அணிந்திருந்தேன் அந்த தங்க செயின் சா-*

பொ.1 இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வீட்டில் இருந்து கிளம்பும் போது மதியம் 12.45 மணி இருக்கும் என்றால் சரிதான் அய்யனார்ஊத்து கிராமம் நடந்து சென்றார் 1/4 மணி நேரத்தில் சென்று விடலாம்.தபால் நிலையத்தில் என்னுடைய வேலை 1/4 மணி நேரத்தில் முடிந்து விட்டது. புகாரில் இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் என்று தான் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல இரண்டு நபர்கள் என்று சொல்லி உள்ளேன்.புகாரில் மேற்படி நபர் என்றுதான் சொல்லி உள்ளேன் என்றும் நபர்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுக்கும்பொழுது நான் பயத்தில் இருந்ததால் அவ்வாறு சொல்லி இருப்பேன்.புகார் கொடுக்கும்பொழுது ஒரு நபர் என்று சொல்லிவிட்டு தற்பொழுது மாற்றி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.சம்பவம் இடத்தில் வேறு யாரும் இருந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.புகாரில் சம்பவம் இடத்தில் எந்த திசையில் சம்பவம் நடந்தது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.புகாரில் வாகனத்தின் எண் இடைசெறுவலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.புகாரில் என்னிடம் நகைகை பறித்த நபர் என்ன தோற்றம் உடையவர்கள் என்று என்ன ஆடைகள் அணிந்திருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் என்னுடைய செயினை அறுத்து சென்றதாகத்தான் புகாரில் சொல்லிஉள்ளேன் என்றால் சரிதான்.புகாரில் அறுந்த நிலையில் உள்ள செயின் என்று தான் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.அறுந்த நிலையில் உள்ள செயினை திருநெல்வேலியில் எனது அப்பா மாற்றி புது செயின் வாங்கி கொடுத்தார்.முதல் விசாரணையில் நான் சொன்ன சா-பொ.1 நான் புதியதாக வாங்கி செயின் என்றால் சரிதான்.சம்பவம் இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு 1/2 மணி நேரம் அல்லது 3/4மணி நேரத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான்.உண்மையிலேயே சம்பவம ்நடந்து இருந்தால் உடனடியாக காவல ்நிலையத்திற்கு சென்று இருப்பேன் என்றும் அவ்வாறு நடக்காததால்தான் காவல் நிலையத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன

விதத்தில் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டு கொண்டதன்பேரில் புள்ளி விபர கணக்கிற்காக இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும்

எந்த விதமான சம்பந்தம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) அ.தாவூத் அம்மாள்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.

**In the Court of the Judicial Magistrate No.II**

**Kovilpatti.**

**DEPOSITION OF WITNESS**

**C.C.246-2018**

PW2 16.10.2018

Name லெட்சுமி

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

*நான் ஏ குப்பணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன் அ.சா.1 எனது மகள் ஆவார். கடந்த 7 மாதங்களுக்கு முன்பு தேதி சரியாக ஞாபகம் இல்லை ஒரு நாள் சுமார் 12.45 மணியளவில் எனது மகள் அய்யனார்ஊத்து தபால் நிலையத்திற்கு போய்விட்டு திரும்பி வரும்பொழுது 1.30 மணியளவில் யாரோ நபர்கள் எனது மகளின் செயினை பறித்து சென்றதாக எனது மகள் என்னிடம் கூறினாள் எனது மகள் அழுது கொண்டே வீட்டிற்கு வந்து சம்பவத்தை பற்றி என்னிடம் கூறினார் உடனே சம்பவம் பற்றி நடவடிக்கை எடுக்ககேட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் அந்த செயின் எடை 1 பவின் 100 மில்லி இருக்கும் அது கோதுமை செயின் மாடல் ஆகும் இது சம்பந்தமாக கயத்தார் காவல் நிலைய போலிசார் விசாரித்தார்கள்*

*குறுக்கு விசாரணை*

*2ம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை*

*நான் கூலி வேலை செய்து வருகிறேன்.நான் காட்டு வேலைக்கு செல்வேன். காலை 9 மணிக்கு சென்று விட்டு மாலை 5 மணிக்கு வேலையில் இருந்து திரும்பி வருவேன்.சம்பவம் நேரத்தில் நான் காட்டு வேலைக்கு சென்று இருந்தேன்.எனது மகள் வீட்டில் இருந்து 12.45 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டாள்.காவல் நிலையத்தில் போலிசார் எனது மகளிடம் கையெழுத்துகள் வாங்கினார்கள் என்றால் சரிதான்.எழுதாத வெள்ள பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.என்னிடம் எழுதாத பேப்பரில் கையெழுத்துகள் வாங்கினார்கள்.நகைகைய எந்த கடையில் எப்பொழுது*

வாங்கியதற்காக சீட்டு எதுவும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.நீதிமன்றத்தில் இருந்து வாங்கி சென்ற செயினை திருநெல்வேலியில் மாற்றி புது நகை பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.இவ்வழக்கில் வழக்கு சொத்தானது தற்பொழுது அ-சா.1 போட்டியிருக்கும் நகை அல்ல என்றால் சரிதான்.நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுகொண்டதன்பேரில் புள்ளி விபர கணக்கிற்காக இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த விதமான சம்பந்தம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல அ.சா.1 காவல் நிலையம் சென்று கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல எனது கணவர் கயத்தார் காவல் நிலையத்திற்கு அடிக்கடி சென்று பழக்கப்பட்டவர் என்றால் சரியல்ல அ.சா1க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) அ.தாவூத் அம்மாள்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.

**In the Court of the Judicial Magistrate No.II**
**Kovilpatti.**
**DEPOSITION OF WITNESS**
**C.C.246-2018**

PW3 16.10.2018

Name பேச்சிமுத்து

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

நான் ஏ குப்பணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன் அ.சா.1,2 ஆகியோர் எனக்கு தெரியும் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த மார்ச் 2018 மாதம் தேதி சரியாக ஞாபகம் இல்லை.பகல் 1 மணிக்-கு மேல் சம்பவம் நடந்தது.அ.சா.1 அழுது கொண்டே வந்து கொண்டு இருந்தார் நான் பக்கத்து ஊருக்கு சென்று இருந்தேன் ஏன் அழுகிறார் என்று கேட்டேன் நகையை அத்துவிட்டதாக சொன்னாள்.சம்பவம் நடந்து 5 நிமிடத்தில் கேட்டு நான் எதிரிகள் தேடி சென்றேன் அப்பொழுது எங்கள் ஊர் காரர் எதிரே வந்தார் அவரிடம் நான் விசாரித்தபோது 2 நபர்கள் சென்றுள்ளதாக சொன்னார்கள் அவர்கள் கெல்மெட் அணிந்திருந்தாக சொன்னார்கள்.இது சம்பந்தமாக நடவடிககை எடுக்ககேட்டு காவல் நிலையத்திற்கு சென்றார் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவம் பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்,அ.சா.1 புகாரில் கெல்மெட் அணிந்து வந்த நபர்கள் தான் செயினை அறுத்து சென்றதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான்.சம்பவம் பற்றி நான் காவல் நிலையத்திற்கு சென்று இருந்தேன்.சம்பவம் இடத்திற்கு 10 நிமிடத்தில் போலிசார் வந்து விட்டார்கள்.சம்பவம் இடத்தில் போலிசார் விசாரித்து அ.சா.1யிடம் புகார் எழுதி வாங்கினார்கள் என்றால் சரிதான்.நீதிமன்றத்தில் இருந்து வழக்கு சமன் வந்த பிறகுதான் வழக்கு சாட்சியாக சேர்த்திருப்பது தெரியவந்தது என்றால் சரிதான்.நான்

*சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சம்பவம் இடத்திற்கு செல்லவில்லை என்றும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த விதமான சம்பந்தம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல*

*என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட*
*தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு*
*சாட்சிக்கு / எதிரிக்கு படித்து*
*காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று*
*ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து*
*செய்தார்.*

*(ஒம்) அ.தாவூத் அம்மாள்,*
*நீதித்துறை நடுவர் எண்.2,*
*கோவில்பட்டி.*